www.surabooks.com

சுராவின்

CBSE

# தமிழ் உரைநூல்

புதிய வினாத்தாள்
அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

வகுப்பு
10

## சிறப்பம்சங்கள்

- அனைத்து பாடங்களுக்கான பாடச்சுருக்கம்
- செய்யுள், உரைநடை விளக்க மனவரைபடங்கள்
- செய்யுள் வரிவினா விடைகள்
- செய்யுள், உரைநடை எளிமையான வினாக்கள் மற்றும் விடைகள்
- இலக்கண விளக்கம் மற்றும் மன வரைபடங்கள்
- CBSE வினாத்தாள் அடிப்படையில் சான்று தருக, நிரப்புக, இலக்கணக் குறிப்பு எழுதுக, கூறியவாறு செய்க – பகுதி இலக்கண வினாக்கள் விடைகள்.
- திருக்குறள் சீர்களால் நிரப்புக – வினா விடைகள்
- எளிய நடையில் துணைப்பாட வினாக்கள் விடைகள்
- பொதுப்பத்தி வினாக்கள் – விடைகள் (பலவுள் தெரிக – சுருக்கமான விடையளி மாதிரி)
- முக்கிய கடிதங்கள் மற்றும் பொதுக்கட்டுரைகள்
- காட்சியைக் கண்டு கவினுற எழுதுக – படங்கள் மற்றும் விடைகள்.
- CBSE மாதிரி வினாத்தாள்கள் 1 முதல் 5 வரை தரப்பட்டுள்ளன.
- CBSE பயிற்சி வினாத்தாள் மற்றும் விடைத்தாள்
- CBSE பிப்ரவரி 2025 வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757/ 98409 26027
enquiry@surabooks.com
Ph: 8124201000 / 8124301000

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : CB10_01

எழுதி வழங்கியவர்

சு.முத்தமிழ்ப்பிரியா, M.A., M.Ed

திருத்தியவர்

சண்முகம், B.Lit.,

All rights reserved © SURA Publications. No part of this book may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, digitally, electronically, mechanically, photocopying, recorded or otherwise, without the written permission of the publishers. Strict action will be taken.

**மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு**

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 81242 01000 / 81243 01000
வாட்ஸ்அப் : 81242 01000 / 98409 26027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்

**Head Office**

**Sura Publications**
1620, 'J' Block, 16th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**E-mail :** orders@surabooks.com
**Website :** www.surabooks.com

**For Orders Contact**

**80562 94222**
**81242 01000**
**81243 01000**
**96001 75757**
**98409 26027**

29-3-2025

www.surabooks.com

# பதிப்பாசிரியர் உரை

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக. – திருவள்ளுவர்**

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் CBSE தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** பத்தாம் வகுப்பிற்கான **CBSE தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

CBSE வினாத்தாள் அடிப்படையில் செய்யுள், உரைநடை, இலக்கணம், துணைப்பாட வினாக்கள் விடைகள், கடிதங்கள் மற்றும் பொதுக்கட்டுரைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த CBSE தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**
**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

## மாணவச் செல்வங்களே...

- ஆர்வமே சிறந்த செயலாக்கத்திற்கான வழி...
- பாடங்களை ஆர்வத்துடன் புரிந்து கொண்டு கதைப் போல் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு செய்யுளையும் அந்நூல், இயற்றியவர் பெயர் அறிந்திருக்க வேண்டும்.
- பாடபுத்தகத்தில் உரைநடை பகுதியில் உள்ள உட்தலைப்புகளை குறித்துக் கொள்க.
- செய்யுள் பகுதியில் நூற்குறிப்பு, ஆசிரியர் குறிப்பு, சொல்லும் பொருளும், இலக்கணக் குறிப்பு படித்தல் அவசியம். இலக்கணப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தினை படித்து புரிந்துக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதி பயிற்சிப் பெறுக.
- திருக்குறள் பகுதியில் குறள் இடம்பெறும் அதிகாரங்களின் தலைப்புகளையும் விளக்கவுரைகளையும் படித்தால், செய்யுள் வினாப் பகுதியில் திருக்குறள் வினா கேட்கப்பட்டால் விடை எழுத எளிதாக இருக்கும்.
- கட்டுரை வினாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்புகளுக்கான தலைப்பை எழுத வேண்டும். குறிப்புகளைக் கொண்டு குறிப்புச்சட்டகம் அமைத்தல் வேண்டும். குறிப்புகளைக் கொண்டு முன்னுரை மற்றும் முடிவுரையோடு குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு உட்தலைப்புகள் எழுத வேண்டும்.
- பழமொழிகள், திருக்குறள், மேற்கோள்கள், செய்யுள் வரிகள் போன்றவற்றைப் பயன்படுத்தினால் பொதுக்கட்டுரை சிறப்பாக அமையும்.

**ஆழ்ந்து படியுங்கள் வெற்றி உங்களுக்கே!**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | மொழி **அமுதஊற்று** | அன்னை மொழியே! **(செய்யுள்)** | 1-40 |
| | | தமிழ்ச்சொல் வளம் **(உரைநடை)** | |
| | | இரட்டுற மொழிதல் **(செய்யுள்)** | |
| | | உரைநடையின் அணிநலன்கள் **(துணைப்பாடம்)** | |
| | | எழுத்து, சொல் **(இலக்கணம்)** | |
| 2. | இயற்கை, சுற்றுச்சூழல் **உயிரின் ஓசை** | கேட்கிறதா என் குரல்! **(உரைநடை)** | 41-76 |
| | | காற்றே வா! **(செய்யுள்)** | |
| | | முல்லைப்பாட்டு **(செய்யுள்)** | |
| | | புயலிலே ஒரு தோணி **(துணைப்பாடம்)** | |
| | | தொகைநிலைத் தொடர்கள் **(இலக்கணம்)** | |
| 3. | பண்பாடு **கூட்டாஞ்சோறு** | விருந்து போற்றுதும்! **(உரைநடை)** | 77-120 |
| | | காசிக்காண்டம் **(செய்யுள்)** | |
| | | மலைபடுகடாம் **(செய்யுள்)** | |
| | | கோபல்லபுரத்து மக்கள் **(துணைப்பாடம்)** | |
| | | தொகாநிலைத் தொடர்கள் **(இலக்கணம்)** | |
| | | திருக்குறள் **(வாழ்வியல்)** | |
| 4. | அறிவியல், தொழில்நுட்பம் **நான்காம் தமிழ்** | செயற்கை நுண்ணறிவு **(உரைநடை)** | 121-158 |
| | | பெருமாள் திருமொழி **(செய்யுள்)** | |
| | | பரிபாடல் **(செய்யுள்)** | |
| | | விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை **(துணைப்பாடம்)** | |
| | | இலக்கணம் - பொது **(இலக்கணம்)** | |
| 5. | கல்வி **மணற்கேணி** | மொழிபெயர்ப்புக் கல்வி **(உரைநடை)** | 159-196 |
| | | நீதிவெண்பா **(செய்யுள்)** | |
| | | திருவிளையாடற் புராணம் **(செய்யுள்)** | |
| | | புதிய நம்பிக்கை **(துணைப்பாடம்)** | |
| | | வினா விடை வகைகள், பொருள்கோள் **(இலக்கணம்)** | |


www.surabooks.com



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 6. | கலை, அழகியல், புதுமைகள் **நிலா முற்றம்** | பன்முகக் கலைஞர் **(உரைநடை)** | 197-240 |
| | | பூத்தொடுத்தல் **(செய்யுள்)** | |
| | | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் **(செய்யுள்)** | |
| | | கம்பராமாயணம் **(செய்யுள்)** | |
| | | பாய்ச்சல் **(துணைப்பாடம்)** | |
| | | அகப்பொருள் இலக்கணம் **(இலக்கணம்)** | |
| | | திருக்குறள் | |
| பொதுப்பத்தி வினா - விடைகள் | | | 241-284 |
| கடிதங்கள் | | | 285-297 |
| காட்சியைக் கண்டு கவினுற எழுதுக | | | 298-301 |
| பொதுக்கட்டுரைகள் | | | 302-328 |
| CBSE மாதிரி வினாத்தாள்கள் 1 முதல் 5 வரை | | | 329-358 |
| CBSE பயிற்சி வினாத்தாள் மற்றும் விடைத்தாள் | | | 359-374 |
| CBSE பிப்ரவரி 2025 வினாத்தாள் விடைகளுடன் | | | 375-390 |


## படைப்புகளும் ஆசிரியர்களும் சிறப்புப் பெயர்களும்

| படைப்புகள் | ஆசிரியர்கள் | படைப்புகள் | ஆசிரியர்கள் |
|---|---|---|---|
| அன்னைமொழியே | பாவலரேறு பெருஞ்சித்திரனார் | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | குமரகுருபரர் |
| தமிழ்ச்சொல்வளம் (உ) | தேவநேயப்பாவாணர் (மொழிஞாயிறு) | கம்பராமாயணம் | கம்பர்(கல்வியில் பெரியவர்) |
| இரட்டுற மொழிதல் | சந்தக்கவிமணி தமிழழகனார் | உரைநடையின் அணிநலன்கள்(து) | எழில்முதல்வன் |
| காற்றே வா! | பாரதியார் (சிந்துக்குத் தந்தை, மகாகவி) | புயலிலே ஒரு தோணி (து) | ப. சிங்காரம் |
| முல்லைப்பாட்டு | நப்பூதனார் | கோபல்லபுரத்து மக்கள் (து) | கி. ராஜநாராயணன் |
| காசிக் காண்டம் | அதிவீரராம பாண்டியர் (சீவலமாறன்) | விண்ணைத்தாண்டிய தன்னம்பிக்கை (து) | ஸ்டீபன் ஹாக்கிங் |
| மலைபடுகடாம் | பெருங்கௌசிகனார் | புதிய நம்பிக்கை (து) | கமலாலயன் |
| திருக்குறள் | திருவள்ளுவர் (தெய்வப் புலவர்) | பாய்ச்சல் (து) | சா. கந்தசாமி |
| பெருமாள் திருமொழி | குலசேகராழ்வார் (கொல்லிக் காவலன், கூடல் நாயகன் வில்லவர் கோன்) | | |
| பரிபாடல் | கீரந்தையார் | | |
| நீதிவெண்பா | கா.ப.செய்குதம்பிப் பாவலர் (சதாவதானி) | | |
| திருவிளையாடற்புராணம் | பரஞ்சோதி முனிவர் | | |
| பூத்தொடுத்தல் | உமா மகேஸ்வரி | | |

| நூல்கள் | சிறப்பு பெயர்கள் |
|---|---|
| மலைபடுகடாம் | கூத்தராற்றுப்படை |
| பரிபாடல் | ஓங்கு பரிபாடல் |
| நறுந்தொகை | வெற்றிவேற்கை |
| கம்பராமாயணம் | இராமாவதாரம் |
| திருக்குறள் | உத்தரவேதம், வாயுறை வாழ்த்து, உலகப்பொதுமறை |



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

## TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'** Kindly prepare your order in your School letterhead and send it to us. For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : Padi |
| IFSC | : SBIN0005083 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : UCBA0002100 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** |
| Bank Name | : **INDIAN BANK** |
| Bank Branch | : Asiad Colony |
| IFSC | : IDIB000A098 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : KVBL0001154 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **13240200032412** |
| Bank Name | : **FEDERAL BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : FDRL0001324 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **50200031530945** |
| Bank Name | : **HDFC BANK** |
| Bank Branch | : Cenotaph Road, Teynampet |
| IFSC | : HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

G Pay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
**Phone :** 044-4862 9977, 044-4862 7755.
**Mobile :** 96001 75757 / 81242 01000 / 81243 01000.
**Email :** orders@surabooks.com **Website :** www.surabooks.com

www.surabooks.com



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

**TAMIL**

**CLASS: X (2025 - 2026)**

**(IYAL 1 to 6)**

**Time : 3 hrs** **Total :80 Marks**

**Section –A - Reading Unseen Passage** **10 marks**

1. Unseen passage- MCQ (5 marks)
   (Mozhi, Ilakkiyam, Varalaru)
2. Unseen passage - Short answer (5 marks)
   (Mozhi, Ilakkiyam, Varalaru)

**Section -BGrammar Section (MCQ)** **12 marks**

1. Eluthu, Chol
2. Thogainilai Thodarkal
3. Thogaanilai Thodarkal
4. Ilakkanam - Podhu
5. Vinaa, Vidai Vagai, Porulkol
6. Agaporul Ilakkanam

**Section -C Main Course Book (MCQ, Short Answer & Long Answer)** **31 Marks**

**Part -1: Prose**

1. Tamil CholValam
2. Ketgirathaa En Kural
3. Virunthu Potruthum
4. Seyarkai Nunnarivu
5. Mozhipeyarpu Kalvi
6. Panmuga kalaignar

**Part - II : Poetry**

1. Annai Mozhiye
2. Iratura Mozhithal
3. Kaatrae Vaa
4. Mullai Paattu
5. Kaasi kaantam
6. Malaipadu Kadaam
7. Thirukkural
8. Perumal Thirumozhi
9. Paripaadal
10. Neethi Venpa
11. Thiruvilaiyadal Puraanam
12. Poo Thoduthal
13. Muthukumaarasami Pillaithamizh
14. Kambaramayanam
15. Thirukkural

**Section –D Non-detail** **10 Marks**

1. Urainadaiyin Aninalangal
2. Puyaliley Oru Thoni
3. Gopallapurathu Makkal
4. Vinnai Thandiya Thannampikkai
5. Puthiya Nampikkai
6. Paaichal

**Section –E Creative Writing** **17 Marks**

1. Official/ Informal Letter (8marks)
2. Essay writing (6marks)
3. Picture Description (3 marks)

**Textbook Prescribed**

Tamil Textbook - Class X, Edition - 2024.

www.surabooks.com



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

## Design of Question Paper- (2025-2026) Class X - TAMIL (006)

| s.no. | Topic | Type of Questions | No. of Questions | Marks | Total |
|---|---|---|---|---|---|
| **Section –A Reading Unseen Passage** | | | | | |
| 1 | Unseen Passage (1) | MCQ | 5 | 5x1 | 5 |
| 2 | Unseen Passage (2) | SA | 5 | 5x1 | 5 |
| **Section -B Grammar** | | | | | |
| 3 | Give Example | MCQ | 5 | 3x1 | 3 |
| 4 | Fill up | MCQ | 5 | 3x1 | 3 |
| 5 | Illakkana kurippu | MCQ | 5 | 3x1 | 3 |
| 6 | Do as Directed | MCQ | 5 | 3x1 | 3 |
| **Section -C Main Course Book** | | | | | |
| 7 | Thirukkural Fill ups | MCQ | 3 | 3x1 | 3 |
| 8 | Poetry Comprehension | MCQ | 5 | 5x1 | 5 |
| 9 | Poetry | SA | 4 | 2x4 | 8 |
| 10 | Prose | LA | 5 | 3x5 | 15 |
| **Section –D Non-detail** | | | | | |
| 11 | Non-detail | LA | 3 | 1x10 | 10 |
| | | | | | |
| **Section –E Creative Writing** | | | | | |
| 12 | Picture Description | SA | 1 | 1x3 | 3 |
| 13 | Letter Writing | LA | 2 | 1x8 | 8 |
| 14 | Essay Writing | LA | 3 | 1x6 | 6 |
| | | | | | 80 |



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

| | |
|---|---|
| MCQ<br>Descriptive | 25 Marks<br>55 Marks |
| Unseen Passage | 10 Marks |
| Grammar | 12 Marks |
| Main course book | 31Marks |
| Non-detail | 10Marks |
| Creative Writing | 17Marks |
| | **80 Marks** |

**Marks Distributionand TAMIL ( 006) X(2025– 2026)**

| Section | Marks Distribution | Marks | Weightage |
|---|---|---|---|
| Sec A | **Comprehension (Unseen Passage)** | 10 | 80 |
| Sec B | **Grammar** | 12 | |
| Sec C | **Course book** | | |
| | Thirukkural Fill ups | 3 | |
| | Poetry comprehension | 5 | |
| | Poetry Short Answer | 8 | |
| | Prose Long Answer | 15 | |
| Sec D | **Non-detail long Answer** | **10** | |
| Sec E | **Creative Writing** | | |
| | Picture Description | 3 | |
| | Letter Writing | 8 | |
| | Composition (General Essay) | 6 | |
| | **Internal Assessment** | 20% | 20 |
| | **Total %** | 100% | 100 |





www.surabooks.com


www.surabooks.com



# அன்னை மொழியே (கவிதைப்பேழை)

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்


## மன வரைபடம்




## நூற்குறிப்பு

- பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி-1) தொகுப்பிலிருந்து தமிழ்த்தாய்வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும் போன்ற இருவேறு தலைப்புகளில் உள்ள பாடல்கள் பாடப்பகுதியாக உள்ளது. கனிச்சாறு 8 பாடல் தொகுதிகளை உடைய ஒரு கவிதை நூலாகும்.

## ஆசிரியர் குறிப்பு



| | |
|---|---|
| **ஆசிரியர் பெயர்** | : பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| **இயற்பெயர்** | : துரை. மாணிக்கம் |
| **பெற்றோர்** | : **தந்தையார்** –துரைசாமி ; **தாயார்** – குஞ்சம்மாள் |
| **காலம்** | : 10.03.1933 ஆம் ஆண்டு முதல் 11.06.1995 ஆம் ஆண்டு வரை |
| **பிறந்த ஊர்** | : சேலம் மாவட்டம் |
| **இயற்றிய நூல்கள்** | : கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப் பறவைகள், நூறாசிரியம், உலகியல் நூறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி. |
| **எழுதிய உரைநூல்** | : திருக்குறள் மெய்ப்பொருளுரை (தமிழுக்குக் கருவூலமாக அமைந்தது) |
| **நடத்திய இதழ்கள்** | : தென்மொழி, தமிழ்ச்சிட்டு. |

இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



**சொற்பொருள்**

1. முன்னைக்கும் முன்னை - பழமைக்கும் பழமை
2. மன்னி - நிலைத்து
3. செப்பரிய - சொல்லுதற்குரிய
4. மாண் புகழே - பெரும் புகழே
5. விந்தை - வியக்கத்தக்க
6. தும்பி - வண்டு
7. நா - நாக்கு
8. அன்னை - தாய்
9. சிறகார்ந்த - சிறகசைத்து
10. முகிழ்ந்த - தோன்றிய

**இலக்கணக் குறிப்பு**

1. செந்தமிழ், நறுங்கனி. நெடுநிலைப்பு - பண்புத்தொகைகள்
2. நின்பெருமை - ஆறாம் வேற்றுமைத்தொகை
3. பேரரசே - விளித்தொடர்



**விடையளிக்க**

**குறுவினா**

1. **'மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!' – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.** **(பாடநூல் வினா)**
   1. சீவகசிந்தாமணி
   2. வளையாபதி
   3. குண்டலகேசி.

**சிறுவினா**

1. **தமிழன்னையைத் தலை பணிந்து வாழ்த்துவதாகப் பாவலரேறு பாடுவதை எழுதுக. (அல்லது) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை? (பாடநூல் வினா)**
   1. அன்னைமொழியே! அழகாய் அமைந்த செந்தமிழே! **பழமைக்குப் பழமையாய்த்** தோன்றிய நறுங்கனியே!
   2. கடல் கொண்ட **குமரிக் கண்டத்தில்** நிலைத்து நின்று அரசாட்சி செய்யும் மண்ணுலகின் பேரரசே!
   3. பாண்டிய மன்னனின் மகளே!
   4. **திருக்குறளின்** பெருமைக்குரியவளே!
   5. பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண்கீழ்க்கணக்கே!
   6. நிலைத்த **சிலப்பதிகாரமே!** அழகான மணிமேகலையே!
   7. உம்மை **தலைபணிந்து** வாழ்த்துகின்றோம்.

www.surabooks.com



2. **தமிழின் பெருமைகளைப் பாவலரேறு எவ்வாறு எடுத்துரைக்கிறார்?** CBSE பிப்ரவரி–2023

1. செழுமைமிக்க தமிழ் எமக்கு உயிர்போன்றது.
2. சொல்லுதற்குரிய அதன் பெருமைகளை என்னுடைய தமிழ்நாக்கு எவ்வாறு எடுத்துரைக்கும்?
3. பழம்பெருமையும் தனக்கெனத் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்டது.
4. வியக்கவைக்கும் உன் நீண்ட நிலைத்த தன்மையும், வேற்று மொழியார் உன்னைப் பற்றி உரைத்த புகழுரையும் எனக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன.
5. வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் பாடுகின்றோம்.

**நெடுவினா**

1. **மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. (பாடநூல் வினா)**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| முன்னுரை<br>பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்து<br>பாவலரேறு தமிழ் வாழ்த்து<br>முடிவுரை |

**முன்னுரை:**

அனைவருக்கும் வணக்கம். இங்கு மனோன்மணீயம் அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் பாவலரேறு அவர்களின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு பார்ப்போம்.

**பெ.சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்து:**

என் தமிழ்த்தாய் கடலையே ஆடையாக அணிந்திருப்பவள். அவளின் அழகிய திருமுகப் பாரத கண்டமாக திகழ்கிறது. அம்முகத்திற்கு பிறைநிலா போன்ற நெற்றியாகத் தக்காணப் பீடபூமியும், நெற்றியில் பொட்டு வைத்தது போல தமிழகமும் உள்ளது. பொட்டின் மணம் எல்லோரையும் இன்புறச் செய்வது போல் தமிழ்த்தாய் எல்லாத் திசைகளிலும் புகழ் பெற்றவளாக இருக்கிறாள்.

உலகின் மூத்தமொழியாகவும் இன்னும் இளமையாகவும் இருக்கின்ற உனது திறமையை வியந்து தாயே! உன்னை வாழ்த்துகின்றேன் என்று மனோன்மணீயம் வாழ்த்துகிறார்.

**பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து :**

அன்னைத் தமிழை அழகு நிறைந்த செந்தமிழ், பழமைக்குப் பழமையாக தோன்றிய நறுங்கனி. கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசு, பாண்டிய மன்னனின் மகள், திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவள் என்றும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்களை தன்னுள் கொண்டுள்ளதால் தலைபணிந்து வாழ்த்துகின்றேன்.

பழம்பெருமையும் தனக்கென தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே! வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்து பாடுவது போன்று உனது உன்னைச் சுவைத்து உள்ளத்தில் இன்பத்தீ பொங்கி எழ உன் சிறப்புகளை எல்லாத் திசைகளிலும் முழங்குகின்றேன் என்று கூறுகிறார்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



**முடிவுரை :**

இவ்வாறு தமிழின் பெருமை, பழமை, சிறப்பு, வியப்பு என எல்லாவற்றையும் மனோன்மணீயம் பெ.சுந்தரனார் அவர்களும் பெருஞ்சித்திரனார் அவர்களும் தமிழின் பெருமையைப் போற்றி வாழ்த்துகின்றனர்.

நன்றி. வணக்கம்.

**2. 'எந்தமிழ்நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்' என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்துநிமிட உரை நிகழ்த்துக.**

1. தமிழ் இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. தமிழர் அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர்.
2. தமிழின் பழமையையோ அல்லது அதன் பெருமையையோ வேறு எம்மொழியும் நெருங்கவியலாது.
3. தமிழ்மொழி இறவா இலக்கிய, இலக்கண வளங்கொண்டு தனக்கெனத் தனிநோக்கும் போக்கும் கொண்டுள்ளது.
4. தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்றும், அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழியென்றும் மாக்சு முல்லர் என்னும் மொழி நூலறிஞர் தமிழ்மொழியைச் சிறப்பித்துள்ளார்.
5. நிறைவாக, தமிழின் சிறப்பை நிலைக்கச் செய்வதும் மேலும் வளரச் செய்வதும் தமிழரகளாகிய நமது கடமையாகும்.
6. இதனை உணர்ந்து தமிழின் சீரிளமையைக் காக்க என்றும் பாடுபடுவோம். நன்றி! வணக்கம்!

**3. "முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே" என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் கூறக் காரணம் யாது ?**

1. செழுமை மிகுந்த தமிழே! என்னுயிரே! சொல்லுவதற்கு அரிதான உன்னுடைய பெருமைகளை என் தமிழ் நாக்கு எவ்வாறுதான் விரித்துரைக்கும்.
2. பழம்பெருமை, தமக்கெனத் தனிச்சிறப்பு, இலக்கிய வளம் கொண்ட தமிழே!.
3. உன்னுடைய நிலைத்த தன்மையும் வேற்றுமொழி பேசுபவர்கள் உன்னைப் பற்றிக் கூறிய புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன.

   செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
   அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி

4. என் தனித்தமிழே! வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போல நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

## செய்யுள் வரி வினா விடை

**1. அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!**
**கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்**
**மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!**

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



**வினாக்கள்:**

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?**
   அ) தென்மொழி ஆ) தமிழ்ச்சிட்டு
   இ) கனிச்சாறு ஈ) பாவியக்கொத்து **விடை இ) கனிச்சாறு**
2. **இப்பாடலை இயற்றியவர் யார் ?**
   அ) துரை.மாணிக்கம் ஆ) இராசமாணிக்கம்
   இ) பு.குலமாணிக்கம் ஈ) இரா.வேதமாணிக்கம் **விடை அ) துரை.மாணிக்கம்**
3. **செந்தமிழ் – இலக்கணக்குறிப்பு எழுதுக.**
   அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
   இ) வேற்றுமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை **விடை ஆ) பண்புத்தொகை**
4. **பேரரசு – பிரித்து எழுதுக.**
   அ) பெரிய + அரசு ஆ) பெருமை + அரசு
   இ) பெரு + அரசு ஈ) பேர் + அரசு **விடை ஆ) பெருமை + அரசு**
5. **கடல் கொண்ட நாடு எது ?**
   அ) இலெமுரியா கண்டம் ஆ) குமரிக்கண்டம்
   இ) ஆப்பிரிக்க கண்டம் ஈ) அமெரிக்க கண்டம் **விடை ஆ) குமரிக்கண்டம்**

---

2. **தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!**
   **இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!**
   **மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!**
   **முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!**

**வினாக்கள்:**

1. **தென்னன் மகள் என்பதன் பொருள் யாது ?**
   அ) சோழ மன்னனின் மகள் ஆ) சேர மன்னனின் மகள்
   இ) பாண்டிய மன்னனின் மகள் ஈ) பல்லவ மன்னனின் மகள்
   **விடை இ) பாண்டிய மன்னனின் மகள்**
2. **நற்கணக்கு நூல்கள் எத்தனை ?**
   அ) 10 ஆ) 12 இ) 16 ஈ) 18 **விடை ஈ) 18**
3. **அழகானது எது ?**
   அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
   இ) குண்டலகேசி ஈ) வளையாபதி **விடை ஆ) மணிமேகலை**
4. **'முடி' என்பதன் பொருள் யாது ?**
   அ) கண் ஆ) காது இ) செவி ஈ) தலை **விடை ஈ) தலை**
5. **சங்க இலக்கியங்கள் எவை ?**
   அ) பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆ) வளையாபதியும் குண்டலகேசியும்
   இ) மேல்கணக்கும் கீழ்க்கணக்கும் ஈ) சிலப்பதிகாரமும் மணிமேகலையும்
   **விடை அ) பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்**

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



3. **உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்**
**செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த**
**அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி**
**முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!**

**வினாக்கள்:**

1. **இப்பாடலை இயற்றியவர் யார் ?**
அ) பரிதிமாற்கலைஞர் ஆ) பாவாணர்
இ) பெருஞ்சித்திரனார் ஈ) மறைமலை அடிகள் **விடை இ) பெருஞ்சித்திரனார்**

2. **செந்தாமரைத் தேனைக் குடிப்பது எது ?**
அ) பறவை ஆ) அன்னம் இ) வண்டு ஈ) விலங்கு **விடை இ) வண்டு**

3. **எங்கு கனல் மூள்கிறது ?**
அ) எண்ணத்தில் ஆ) உள்ளத்தில்
இ) சிந்தையில் ஈ) அறிவில் **விடை ஆ) உள்ளத்தில்**

4. **யாருடைய பெருமையை முழங்குவதாக இப்பாடல் அமைந்துள்ளது ?**
அ) தமிழ் மன்னர்களின் பெருமையை ஆ) தமிழர்களின் பெருமையை
இ) தமிழ்மொழியின் பெருமைகளை ஈ) பாண்டிய மன்னனின் பெருமைகளை
**விடை இ) தமிழ்மொழியின் பெருமைகளை**

5. **இப்பாடலின் தலைப்பு யாது ?**
அ) எங்கள் மொழி ஆ) தனித்தமிழ்
இ) அன்னை மொழியே ஈ) செம்மொழி சிறப்புகள் **விடை இ) அன்னை மொழியே**

**கூடுதல் வினாக்கள்**

1. **மன்னி என்ற சொல்லின் பொருள் யாது ?**
அ) நிலைத்து ஆ) உயர்ந்து
இ) தாழ்ந்து ஈ) நெகிழ்ந்து **விடை அ) நிலைத்து**

2. **இப்பாடலில் குறிப்பிடப்படும் காப்பியங்கள்**
அ) சிலப்பதிகாரம், குண்டலகேசி ஆ) சிலப்பதிகாரம், எட்டுத்தொகை
இ) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஈ) சிலப்பதிகாரம், மணிமேகலை
**விடை ஈ) சிலப்பதிகாரம், மணிமேகலை**

3. **உணர்வெழுப்ப – பிரித்தெழுதுக.**
அ) உணர் வெழுப்ப ஆ) உணர்வு எழுப்ப
இ) உண வெழுப்ப ஈ) உணர் எழுப்ப **விடை ஆ) உணர்வு + எழுப்ப**

4. **சிறகார்ந்த – பொருள் தருக.**
அ) சிறகு அசைத்து ஆ) சிறகின் உள்ளே
இ) வெளிச்சிறகில் ஈ) சிறகு சுருக்கி **விடை அ) சிறகு அசைத்து**

☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com




# தமிழ்ச்சொல் வளம் (உரைநடை உலகம்)

- தேவநேயப் பாவாணர்


**பாடச் சுருக்கம்**

| தாவரங்களின் அடிப்பகுதியைக் குறிக்கும் சொற்கள் | |
|---|---|
| 1. **தாள்** | நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடிப்பகுதி |
| 2. **தண்டு** | கீரை, வாழை முதலியவற்றின் அடிப்பகுதி |
| 3. **கோல்** | நெட்டி, மிளகாய்ச் செடி முதலியவற்றின் அடிப்பகுதி |
| 4. **தூறு** | குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடிப்பகுதி |
| 5. **தட்டு** | கம்பு, சோளம் முதலியவற்றின் அடிப்பகுதி |
| 6. **கழி** | கரும்பின் அடிப்பகுதி |
| 7. **கழை** | மூங்கிலின் அடிப்பகுதி |
| 8. **அடி** | புளி, வேம்பு முதலியவற்றின் அடிப்பகுதி |







| தாவரங்களின் கிளைப் பகுதியைக் குறிக்கும் சொற்கள் | |
|---|---|
| 1. **கவை** | அடிமரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை |
| 2. **கொம்பு** | கவையின் பிரிவு |
| 3. **கிளை** | கொம்பின் பிரிவு |
| 4. **சினை** | கிளையின் பிரிவு |
| 5. **போத்து** | சினையின் பிரிவு |
| 6. **குச்சு** | போத்தின் பிரிவு |
| 7. **இணுக்கு** | குச்சியின் பிரிவு |



| தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் | |
|---|---|
| 1. **இலை** | புளி, வேம்பு முதலியவற்றின் இலை |
| 2. **தாள்** | நெல், புல் முதலியவற்றின் இலை |
| 3. **தோகை** | சோளம், கரும்பு முதலியவற்றின் இலை |
| 4. **ஓலை** | தென்னை, பனை முதலியவற்றின் இலை |
| 5. **சண்டு** | காய்ந்த தாள் மற்றும் தோகை |
| 6. **சருகு** | காய்ந்த இலை |

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

| காய்ந்த தாவரத்தின் பகுதிகள் (அல்லது) உறுப்புகளின் பெயர்கள் | |
|---|---|
| 1. **சுள்ளி** | காய்ந்த குச்சு(குச்சி) |
| 2. **விறகு** | காய்ந்த சிறுகிளை |
| 3. **வெங்கழி** | காய்ந்த கழி |
| 4. **கட்டை** | காய்ந்த கொம்பு, கவை மற்றும் அடி |

| தாவரத்தின் நுனிப்பகுதியைக் (கொழுந்து) குறிக்கும் சொற்கள் | |
|---|---|
| 1. **துளிர் அல்லது தளிர்** | நெல், புல் முதலியவற்றின் கொழுந்து |
| 2. **முறி கொழுந்து** | புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து |
| 3. **குருத்து** | சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து |
| 4. **கொழுந்தாடை** | கரும்பின் நுனிப்பகுதி |






| பூவின் நிலைகள் | |
|---|---|
| 1. **அரும்பு** | பூவின் தோற்ற நிலை CBSE பிப்ரவரி–2023 |
| 2. **போது** | பூவிரியத் தொடங்கும் நிலை |
| 3. **மலர் (அலர்)** | பூவின் மலர்ந்த நிலை |
| 4. **வீ** | மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை |
| 5. **செம்மல்** | பூ வாடின நிலை |

| தாவரத்தின் பிஞ்சு வகைகளைக் குறிக்கும் சொற்கள் | |
|---|---|
| 1. **பூம்பிஞ்சு** | பூவோடு கூடிய இளம்பிஞ்சு |
| 2. **பிஞ்சு** | இளம் காய் |
| 3. **வடு** | மாம்பிஞ்சு |
| 4. **மூசு** | பலாப்பிஞ்சு |
| 5. **கவ்வை** | எள் பிஞ்சு |
| 6. **குரும்பை** | தென்னை, பனை முதலியவற்றின் பிஞ்சு |
| 7. **முட்டுக் குரும்பை** | சிறுகுரும்பை |
| 8. **இளநீர்** | முற்றாத தேங்காய் |
| 9. **நுழாய்** | இளம்பாக்கு |
| 10. **கருக்கல்** | இளநெல் |
| 11. **கச்சல்** | வாழைப் பிஞ்சு |



www.surabooks.com

www.surabooks.com





| | தாவரங்களின் குலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் |
|---|---|
| 1. **கொத்து** | அவரை, துவரை முதலியவற்றின் குலை |
| 2. **குலை** | கொடி முந்திரி போன்றவற்றின் குலை |
| 3. **தாறு** | வாழைக்குலை |
| 4. **கதிர்** | கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர் |
| 5. **அலகு (அ) குரல்** | நெல், தினை முதலியவற்றின் கதிர் |
| 6. **சீப்பு** | வாழைத்தாற்றின் பகுதி |


| | கெட்டுப்போன காய்கனி வகையைக் குறிக்கும் சொற்கள் |
|---|---|
| 1. **சூம்பல்** | நுனியில் சுருங்கிய காய் |
| 2. **சிவியல்** | சுருங்கிய பழம் |
| 3. **சொத்தை** | புழுபூச்சி அரித்த காய் (அல்லது) கனி |
| 4. **வெம்பல்** | சூட்டினால் பழுத்த பிஞ்சு |
| 5. **அளியல்** | குளுகுளுத்த பழம் |
| 6. **அழுகல்** | குளுகுளுத்து நாறிய பழம் (அல்லது) காய் |
| 7. **சொண்டு** | பதராய்ப் போன மிளகாய் |
| 8. **கோட்டான் காய் (அ) கூகைக்காய்** | கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்டுப்போன காய் |
| 9. **தேரைக்காய்** | தேரை அமர்ந்ததினால் கெட்டுப்போன காய் |
| 10. **அல்லிக்காய்** | தேரை அமர்ந்ததினால் கெட்டுப் போன தேங்காய் |
| 11. **ஒல்லிக்காய்** | தென்னையில் கெட்ட காய் |





| பழத்தோல் வகையைக் குறிக்கும் சொற்கள் | |
|---|---|
| 1. **தொலி** | மிக மெல்லியது |
| 2. **தோல்** | திண்மையானது |
| 3. **தோடு** | வன்மையானது |
| 4. **ஓடு** | மிக வன்மையானது |
| 5. **குடுக்கை** | சுரையின் ஓடு |
| 6. **மட்டை** | தேங்காய் நெற்றின் மேற்பகுதி |
| 7. **உமி** | நெல், கம்பு முதலியவற்றின் மூடி |
| 8. **கொம்மை** | வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி |

| மணி வகைகளுக்கு (தானியங்கள்) வழங்கும் சொற்கள் | |
|---|---|
| 1. **கூலம்** | நெல், புல்(கம்பு) முதலிய தானியங்கள் |
| 2. **பயறு** | அவரை, உளுந்து முதலியவை |
| 3. **கடலை** | வேர்க்கடலை, கொண்டைக் கடலை முதலியவை |
| 4. **விதை** | கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து |
| 5. **காழ்** | புளி, காஞ்சிரை (நச்சுமரம்) முதலியவற்றின் வித்து |
| 6. **முத்து** | வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து |
| 7. **கொட்டை** | மா, பனை முதலியவற்றின் வித்து |
| 8. **தேங்காய்** | தென்னையின் வித்து |
| 9. **முதிரை** | அவரை, துவரை முதலியவற்றின் பயறுகள் |





| இளம் பயிர் வகைகளுக்கு வழங்கும் சொற்கள் | |
|---|---|
| 1. **நாற்று** | நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலை |
| 2. **கன்று** | மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை |
| 3. **குருத்து** | வாழையின் இளநிலை |
| 4. **பிள்ளை** | தென்னையின் இளநிலை |
| 5. **குட்டி** | விளாவின் இளநிலை |
| 6. **மடலி (அ) வடலி** | பனையின் இளநிலை |
| 7. **பைங்கூழ்** | நெல், சோளம் முதலியவற்றின் பசும் பயிர் |

1. வடநாட்டில் கோதுமை வகைகளில் சம்பாக் கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகள் மட்டுமே உள்ளன.
2. **தமிழ்நாட்டின் நெல் வகைகள்:** செந்நெல், வெண்ணெல், கார்நெல், சம்பா, மட்டை, கார் என்ற பல வகைகள் உள்ளன.
3. **சம்பா நெல்லின் வகைகள்:** ஆவிரம்பூச் சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய **60 உள் வகைகள்** உள்ளன.
4. **தமிழ்நாட்டைத் தவிர வேறெங்கும் விளையாத சிறு கூலங்கள்:** வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி.

## விடையளிக்க

### குறுவினா

1. **ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.** **(பாடநூல் வினா)**
**ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
**ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.**

**சரியான தொடர்கள் :** 1. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
2. ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

| | |
|---|---|
| **பிழையான தொடர்** | : ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன. |
| **பிழைக்கான காரணம்** | : தாறு என்பது வாழைக்குலையைக் குறிக்கும். **சீப்பு** என்பது அதில் அடங்கிய **வரிசையான பழங்கள்** ஆகும். |

**2. தாவரங்களின் அடிப்பகுதி என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகிறது எனப் பட்டியலிடுக.**

| | |
|---|---|
| தாள் | : நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி |
| தண்டு | : கீரை, வாழையின் அடி |
| கோல் | : நெட்டி, மிளகாய்ச் செடியின் அடி |
| துறு | : குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி |
| தட்டு (அ) தட்டை | : கம்பு, சோளம் முதலியவற்றின் அடி |
| கழி | : கரும்பின் அடி |
| கழை | : மூங்கிலின் அடி |
| அடி | : புளி, வேம்புவின் அடி |

**3. தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்களையும் அவை தாவரங்களின் எப்பகுதிக்குப் பொருந்தும் என்பதையும் எழுதுக.**

| | |
|---|---|
| கவை | : மரத்திளின்று பிரியும் மாபெரும் கிளை |
| கொம்பு (அ) கொப்பு | : கவையின் பிரிவு |
| கிளை | : கொம்பின் பிரிவு |
| சினை | : கிளையின் பிரிவு |
| போத்து | : சினையின் பிரிவு |
| குச்சி | : போத்தின் பிரிவு |
| இணுக்கு | : குச்சியின் பிரிவு. |

**4. தாவரங்களின் இலைகள் என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன என்பதைப் பட்டியலிடுக.**

| | |
|---|---|
| புளி, வேம்பு | : இலை |
| தென்னை, பனை | : ஓலை |
| நெல், புல் | : தாள் |
| காய்ந்த இலை | : சருகு |
| சோளம், கரும்பு | : தோகை |

**5. தாவரங்களின் குலைகள் என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றன எனப் பட்டியலிடுக.**

| | |
|---|---|
| கொத்து | : அவரை, துவரை |
| கதிர் | : கேழ்வரகு, சோளக் கதிர் |
| குலை | : கொடி முந்திரி |
| அலகு (அ) குரல் | : நெல், தினைக் கதிர் |
| தாறு | : வாழைக்குலை |
| சீப்பு | : வாழைத் தாற்றின் பகுதி |

**6. கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கப்படும் பெயர்கள் யாவை?**

சூம்பல் : நுனியில் சுருங்கிய காய்
சிவியல் : சுருங்கிய பழம்
சொத்தை : புழுபூச்சி அரித்த காய் (அ) கனி
வெம்பல் : சூட்டினால் பழுத்த பிஞ்சு
அளியல் : குளுகுளுத்த பழம்
அழுகல் : குளுகுளுத்து நாறிய பழம் (அ) காய்
சொண்டு : பதறாய்ப் போன மிளகாய்

**7. பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க அவற்றின் தன்மைக்கேற்ப தாவரங்களுக்கு வழங்கப்படும் சொற்களை எழுதுக.**

தொலி : மிக மெல்லியது
குடுக்கை : சுரையின் ஓடு
தோல் : திண்ணமானது
மட்டை : தேங்காய் நெற்றின் மேற்பகுதி
தோடு : வன்மையானது
உமி : நெல், கம்பு ஆகியவற்றின் மூடி
ஓடு : மிக வன்மையானது
கொம்மை : வரகு, கேழ்வரகு உமி

**8. தமிழ்ச்சொல் வளம் குறித்து கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.**

தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத் தெளிவாகத் தோன்றும். தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள என்கிறார கால்டுவெல்.

**9. எவற்றை அமைத்துக்கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்?**

திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும். பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற்கேற்பப் பருப்பொருட் சொற்களும், நுண்பொருட்சொற்களும் அமைத்துக்கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்.

**சிறுவினா**

**1. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது – இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.** **(பாடநூல் வினா)**

பிள்ளை : தென்னம் பிள்ளை வாங்கி வந்தேன்.
வடலி : காட்டில் பனை வடலியைப் பாரத்தேன்.
நாற்று : நெல் நாற்று நட்டேன்.
கன்று : வாழைக்கன்று நட்டேன்.
பைங்கூழ் : சோளப் பைங்கூழ் பசுமையாக உள்ளது.

www.surabooks.com



**2. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை ?**

தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள்.

| | | |
|---|---|---|
| இலை | : | புளி, வேம்பு முதலியவற்றின் இலை |
| தாள் | : | நெல், புல் முதலியவற்றின் இலை |
| தோகை | : | சோளம், கரும்பு முதலியவற்றின் இலை |
| ஓலை | : | தென்னை, பனை முதலியவற்றின் இலை |
| சண்டு | : | காய்ந்த தாளும், தோகையும் |
| சருகு | : | காய்ந்த இலை |

**3. தாவரங்களின் அடிவகை, கிளைப் பிரிவுகள் ஆகியவற்றை விளக்கி எழுதுக.**

**அடிவகை** – ஒரு தாவரத்தின் அடிப் பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்.

| | | |
|---|---|---|
| தாள் | : | நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி |
| தண்டு | : | கீரை, வாழை முதலியவற்றின் அடி |
| கோல் | : | நெட்டி, மிளகாய்ச்செடி முதலியவற்றின் அடி |
| தூறு | : | குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி |
| தட்டு அல்லது தட்டை | : | கம்பு, சோளம் முதலியவற்றின் அடி |
| கழி | : | கரும்பின் அடி |
| கழை | : | மூங்கிலின் அடி |

**கிளைபிரிவுகள்** - தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்கள்.

| | | |
|---|---|---|
| கவை | : | அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை |
| கொம்பு அல்லது கொப்பு | : | கவையின் பிரிவு |
| கிளை | : | கொம்பின் பிரிவு |
| சினை | : | கிளையின் பிரிவு |
| போத்து | : | சினையின் பிரிவு |
| குச்சு | : | போத்தின் பிரிவு |
| இணுக்கு | : | குச்சியின் பிரிவு |

**4. கொழுந்து வகை, பூவின் நிலைகள் ஆகியவற்றின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

CBSE பிப்ரவரி–2023

**கொழுந்து வகை சொற்கள் :**

| | | |
|---|---|---|
| துளிர் அல்லது தளிர் | : | நெல், புல் முதலியவற்றின் கொழுந்து |
| முறி அல்லது கொழுந்து | : | புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து |
| குருத்து | : | சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து |
| கொழுந்தாடை | : | கரும்பின் நுனிப்பகுதி |

**பூவின் நிலைகள் :**

| | | |
|---|---|---|
| அரும்பு | : | பூவின் தோற்ற நிலை |
| போது | : | பூவிரியத் தொடங்கும் நிலை |
| மலர் அல்லது அலர் | : | பூவின் மலர்ந்த நிலை |
| வீ | : | மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை |
| செம்மல் | : | பூ வாடின நிலை. |

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



**5. கெட்டுப்போன காய்கனி வகைகளையும், பழங்களின் வகைகளையும் விளக்கி எழுதுக.**

கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கும் சொற்கள்.

| | | |
|---|---|---|
| சூம்பல் | : | நுனியில் சுருங்கிய காய் |
| சிவியல் | : | சுருங்கிய பழம் |
| சொத்தை | : | புழுபூச்சி அரித்த காய் அல்லது கனி |
| வெம்பல் | : | சூட்டினால் பழுத்த பிஞ்சு |
| அளியல் | : | குளு குளுத்த பழம் |
| அழுகல் | : | குளு குளுத்து நாறிய பழம் |
| சொண்டு | : | பதராய்ப் போன மிளகாய் |
| கோட்டான் காய், கூகைக்காய் | : | கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய் |
| தேரைக்காய் | : | தேரை அமர்ந்ததினால் கெட்ட காய் |
| அல்லிக்காய் | : | தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய் |
| ஒல்லிக்காய் | : | தென்னையில் கெட்ட காய் |

**பழத்தோல் வகை** – பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்கள்

| | | |
|---|---|---|
| தொலி | : | மிக மெல்லியது |
| தோல் | : | திண்ணமானது |
| தோடு | : | வன்மையானது |
| ஓடு | : | மிக வன்மையானது |
| குடுக்கை | : | சுரையின் ஓடு |
| மட்டை | : | தேங்காய் நெற்றின் மேற்பகுதி |
| உமி | : | நெல், கம்பு முதலியவற்றின் மூடி |
| கொம்மை | : | வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி. |

**6. இளம் பயிர் வகைகள், மணி வகைகள் ஆகியவற்றைச் சான்றுடன் விளக்குக.**

**இளம் பயிர் வகை**

| | | |
|---|---|---|
| நாற்று | : | நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலை |
| கன்று | : | மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை |
| குருத்து | : | வாழையின் இளநிலை |
| பிள்ளை | : | தென்னையின் இளநிலை |
| குட்டி | : | விளாவின் இளநிலை |
| மடலி அல்லது வடலி | : | பனையின் இளநிலை |
| பைங்கூழ் | : | நெல், சோளம் முதலியவற்றின் பசும் பயிர் |

**மணி வகை** – தானியங்களுக்கு வழங்கும் சொற்கள்

| | | |
|---|---|---|
| கூலம் | : | நெல், கம்பு முதலிய தானியங்கள் |
| பயறு | : | அவரை, உளுந்து முதலியவை |
| கடலை | : | வேர்க்கடலை, கொண்டைக்கடலை முதலியவை |
| விதை | : | கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து |
| காழ் | : | புளி, காஞ்சிரை(நச்சு மரம்) முதலியவற்றின் வித்து |
| முத்து | : | வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து |
| கொட்டை | : | மா, பனை முதலியவற்றின் வித்து |
| தேங்காய் | : | தென்னையின் வித்து |
| முதிரை | : | அவரை, துவரை முதலிய பயறுகள். |

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

**7. தமிழ்நாடு மிகுந்த பொருள் வளமுடையது – விளக்குக.** CBSE பிப்ரவரி–2023

1. தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.
2. பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன.
3. எடுத்துக்காட்டாக, கோதுமையை எடுத்துக் கொள்ளின் அதில் சம்பாக்கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலிய சிலவகைகளேயுண்டு.
4. ஆனால் தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச் சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.
5. இவற்றோடு வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை. தமிழ்நாட்டுள்ளும் தென்னாட்டிலேயே அவை விளைகின்றன.
6. பழங்காலத்தில் விளைந்த அளவு பொன்னும் மணியும் முத்தும் பவளமும் இன்று விளையா விடினும் அருமையான கூலங்களும் சிறு கூலங்களும் இன்றும் தென்றமிழ் நாட்டில் விளைந்து வருவது கண்கூடு.

**நெடுவினா**

**1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக. (அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் விரிவான உரைக் குறிப்புகளை எழுதுக.**

CBSE பிப்ரவரி–2024 **(பாடநூல் வினா)**

**குறிப்புச்சட்டகம்**

அறிமுகவுரை
சொல்வளம்
சொல்லாக்கத்திற்கான தேவை
நிறைவுரை

வணக்கம்! அன்னைமொழியே! அழகார்ந்த செந்தமிழே! எனப் போற்றப்படும் தமிழ்மொழி பிறமொழிகளுக்கெல்லாம் தலைச்சிறந்த மொழியாகும். அம்மொழியின் சொல்வளத்தைப் பற்றிக் காண்போம்.

**சொல்வளம்:**

1. இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும், தமிழ்மட்டும் அதில் தலை சிறந்ததாகும்.
2. தமிழ்ச்சொல் வளத்தைப் பலதுறைகளிலும் காணலாம்.
3. ஒருபொருட் பல சொல் வரிசைகள் தமிழைத் தவிர வேறு எந்தத் திராவிட மொழிகளின் அகராதிகளிலும் காணப்படவில்லை.
4. பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள என்கிறார் கால்டுவெல்.

www.surabooks.com



**சொல்லாக்கத்திற்கான தேவை:**

1. சொல்லாக்கத்திற்கான தேவை என்பது அதன் பயன்பாட்டு முறையைக் கொண்டே அமைகிறது.
2. இன்றைய அறிவியல் வளரச்சிக்கேற்ப நூல்களைப் புதிய சொல்லாக்கத்துடன் படைத்தல் வேண்டும்.
3. இலக்கிய மேன்மைக்கும் மக்கள் அறிவுடையவர்களாக உயர்வதற்கும், புதிய சொல்லாக்கம் தேவை.
4. மொழி என்பது உலகின் போட்டி போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். அக்கருவி காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும்.
5. தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்க தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை.
6. உலகின் பிற ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி எழுதும் போது பிறமொழி அறியாத தமிழரும் அவற்றைக் குறித்து அறிந்துகொள்ள முடியும்.
7. மொழியே கலாச்சாரத்தின் வழிகாட்டி. அதை நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவை.
8. மக்களிடையே பரந்த மனப்பான்மையையும், ஆளுமையையும் நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவைப்படுகிறது.
9. பிறமொழிச் சொற்கள் கலவாமல் இருக்க காலத்திற்கேற்ப புதிய கலைச்சொல்லாக்கம் ஏற்படுத்த வேண்டும்.

**நிறைவுரை:**

மென்மையான தமிழை மேன்மையான தமிழாக்க அறிவியல் தொழில்நுட்பச் சொற்களைத் தமிழ்ப்படுத்தி தமிழின் பெருமையை உலகிற்குக் கொண்டு செல்வோம். புதிய சொல்லாக்கத்தின் சேவை இன்றைய தமிழுக்குத் தேவை.

☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



# இரட்டுற மொழிதல் (கவிதைப்பேழை)

- சந்தக்கவிமணி தமிழழகனார்

## நூற்குறிப்பு

- புலவர் பலரின் பாடல்களின் தொகுப்பு தனிப்பாடல் திரட்டாகும். இந்த நூலிலிருந்து இப்பாடல் எடுத்தாளப்பட்டுள்ளது. (ஐந்தாம் பகுதி - கழகப்பதிப்பு)

**இரட்டுற மொழிதல் :**

- ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும். இதனை சிலேடை அணி என்றும் அழைப்பர்.
- செய்யுளிலும் உரைநடையிலும் மேடைப்பேச்சிலும் சிலேடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

## ஆசிரியர் குறிப்பு



**ஆசிரியர்** : சந்தக்கவிமணி தமிழழகனார்
**இயற்பெயர்** : சண்முகசுந்தரம்
**பெற்றோர்** : வேலு - வள்ளியம்மை
**காலம்** : 21.4-1929 முதல் 2.10.2015 வரை.
**பிறந்த ஊர்** : தூத்துக்குடி
**சிறப்புப் பெயர்கள்** : சந்தக்கவிமணி, கவிமாமணி, தமிழ் இலக்கியக் காவலர்.
**படைப்புகளில் சில** : தமிழழகன் கவிதைகள், மழலை அமுதம், பூ மத்தாப்பு, இராமகவிதை, ஒளியைத் தேடி, காமாட்சி அந்தாதி.
**சிறப்பு** : இலக்கணப் புலமையும் இளம் வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்றிருந்த இவர் பன்னிரண்டு சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

**<u>சொற்பொருள்</u>**

1. துய்ப்பது - கற்பது, தருதல்
2. மேவலால் - பொருந்துதலால், பெறுதலால்
3. ஆழி - கடல்
4. சங்கம் - மன்றம்
5. வணிகலமும் - வணிகக் கப்பல்
6. மெத்த - மிகவும்
7. சங்கப் பலகை - புலவர்கள் அமரும் அரியணை
8. ஈண்டு - இருந்து
9. தேதமிழ் - தேன் போன்ற தமிழ்
10. நித்தம் - நாள்தோறும்

**<u>இலக்கணக் குறிப்பு</u>**

1. முத்தமிழ், முச்சங்கம் - பண்புத்தொகைகள்
2. காக்க - வியங்கோள் வினைமுற்று
3. கிடந்த - வியங்கோள் வினைமுற்று

www.surabooks.com



## விடையளிக்க

### குறுவினா

**1. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக. (பாடநூல் வினா)**

1. ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள்பட வருவது **இரட்டுற மொழிதல்** அணி எனப்படும். இதனைச் '**சிலேடை அணி**' என்றும் அழைப்பர்.
2. தற்கால உரைநடையிலும் மேடைப்பேச்சிலும் **சிலேடைகள்** பயன்படுத்தப்படுகின்றன.
3. **எடுத்துகாட்டு :** சென்னை வரவேற்கிறது என்பதை, சென்னை வர வேர்க்கிறது (**வியர்க்கிறது** என்பதன் பேச்சு வழக்கு) என்று சிலேடை மூலம் **பகடியாகச்** சொல்லலாம்.

**2. சந்தக்கவிமணி தமிழழகனார் – குறிப்பு வரைக.**

**இயற்பெயர்** : சண்முகசுந்தரம்

**சிறப்புப் பெயர்கள்** : சந்தக்கவிமணி, கவிமாமணி, தமிழ் இலக்கியக் காவலர்.

**சிறப்பு** : இலக்கணப் புலமையும் இளம் வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்றிருந்த இவர் **பன்னிரண்டு** சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

### சிறுவினா

**1. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக. (அல்லது) தமிழ், கடல் ஒப்புமைப் பற்றி இரட்டுற மொழிதலில் தமிழழகனார் பாடிய பாங்கினை விளக்குக. (பாடநூல் வினா)**

| பாடல் அடிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் துய்ப்பதால் | இயல், இசை, நாடகம் ஆகியன வளர்ந்தது. | முத்தினை அமிழ்ந்து தருகிறது. |
| முச்சங்கம் கண்டதால் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது |
| மெத்த வணிகலமும் மேவலால் (மெத்த அணிகலன்) | ஐம்பெருங்காப்பியங்களை அணிகலனாய்ப் பெற்றது | மிகுதியான வணிகக் கப்பல்கள் வந்து சென்றன |
| நித்தம் அணை கிடந்தே சங்கத்தவர் காக்க | சங்கப்பலகையில் அமர்ந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தனர் | தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காத்தது |

## செய்யுள் வரி வினா விடை

CBSE பிப்ரவரி–2023

**1. முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்**
**மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்**
**அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு**
**இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.**

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



**வினாக்கள்:**

1. **இப்பாடலின் தொகுப்பு யாது ?**

அ) தனிப்பாடல் திரட்டு ஆ) இராசராசன் உலா
இ) முக்கூடற்பள்ளு ஈ) பிள்ளைத்தமிழ் **விடை அ) தனிப்பாடல் திரட்டு**

2. **இப்பாடலை இயற்றியவர் யார் ?**

அ) ஈரோடு தமிழன்பன் ஆ) தமிழழகனார்
இ) பெருஞ்சித்திரனார் ஈ) மறைமலை அடிகள் **விடை ஆ) தமிழழகனார்**

3. **மெத்த அணிகலன் என்பது யாது ?**

அ) சிற்றிலக்கியங்கள் ஆ) நீதி இலக்கியங்கள்
இ) ஐம்பெருங்காப்பியங்கள் ஈ) பக்தி இலக்கியங்கள்
**விடை இ) ஐம்பெருங்காப்பியங்கள்**

4. **இரட்டுற மொழிதல் அணிக்கு வேறு பெயர் யாது ?**

அ) பிறிதுமொழிதல் அணி ஆ) தற்குறிப்பேற்றணி
இ) வஞ்சப்புகழ்ச்சி அணி ஈ) சிலேடை அணி **விடை ஈ) சிலேடை அணி**

5. **கடல் எத்தனை வகையான சங்குகளைத் தருகிறது ?**

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **விடை ஆ) மூன்று**

**கூடுதல் வினாக்கள் :**

1. **சங்கப்பலகை – பிரித்து எழுதுக.**

அ) சங்க + பலகை ஆ) சங்கம் + பலகை
இ) சங்கு + பலகை ஈ) சங்கப் + பலகை **விடை ஆ) சங்கம் + பலகை**

2. **ஆழி – பொருள் தருக.**

அ) ஆழம் ஆ) முத்து இ) கடல் ஈ) கப்பல் **விடை இ) கடல்**

3. **காக்க – இலக்கணக்குறிப்பு தருக.**

அ) வினைத்தொகை ஆ) வியங்கோள் வினைமுற்று
இ) வினையெச்சம் ஈ) வினைச்சொல் **விடை ஆ) வியங்கோள் வினைமுற்று**

4. **'முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்' – இப்பாடலில் பயின்றுவரும் அணி..................**

அ) இரட்டுற மொழிதல் அணி ஆ) தற்குறிப்பேற்றணி
இ) சொற்பொருள் பின்வரு நிலையணி ஈ) வேற்றுமையணி **விடை அ) இரட்டுற மொழிதல் அணி**

☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



# உரைநடையின் அணிநலன்கள் (விரிவானம்)

- எழில் முதல்வன்

**குறிப்புச்சட்டகம்**

முன்னுரை
இக்கால, அக்கால இலக்கிய வடிவங்கள்
உருவகமும் உவமையும்
உவமை அணியும் இணை ஒப்பும்
இலக்கணையும், எதுகை மோனையும்
கேள்வியிலேயே பதில்
முடிவுரை

**முன்னுரை**

இலக்கியங்கள் காலம் காட்டும் கண்ணாடி, ஆதித்தமிழன் தன் மனதில் எழும் கருத்துகளையும், வாழ்வியலையும் இலக்கியமாக வடித்தான். சங்கக் காலத்தில் பா வடிவில் இருந்த இலக்கியங்கள் தற்போது கால மாற்றத்தால் பல்வேறு வடிவங்களைப் பெற்றுள்ளது. சங்கக்காலம் முதல் தற்போது வரை உள்ள இலக்கிய வடிவங்களையும் அதன் சிறப்புகளையும் இக்கட்டுரையில் காண்போம்.

**இக்கால, அக்கால இலக்கிய வடிவங்கள்**

தற்காலத்தில் புதுப்புது இலக்கிய வடிவங்கள் தோன்றியிருக்கின்றன. சங்கப் பாடல்களுக்குப் பின், தமிழ் இலக்கியம் அற இலக்கியங்களாகி, காப்பியங்களாகி, சிற்றிலக்கியங்களாகி, சந்தக் கவிதைகளாகி, புதுக்கவிதைகளாகி... இப்போது நவீன கவிதைகளில் வந்து நிற்கிறது. உரைநடையின் வளர்ச்சியோ அளவற்றது! சிறுகதை, கட்டுரை, புதினம்... இவையெல்லாம் தற்கால இலக்கிய வடிவங்கள் ஆகும். பேசினால் உரையாடல், எழுதினால் உரைநடை, பெரும்பாலும் உரைநடை வடிவில்தான் இலக்கியம் படைக்கப்படுகிறது.

**உருவகமும் உவமையும்**

உணர்ச்சிகளைக் காட்ட உவமை கொண்ட மொழிநடையே சிறந்தது. திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக் கண்ணாடிகளைப் போல் வடபுறமும் தென்புறமும் “நீர் நிறைந்த கண்மாய்கள்” என்று குறிஞ்சிமலர் என்னும் நூலில் நா.பார்த்தசாரதி உவமையைப் பயன்படுத்தியுள்ளார்.

இலக்கியங்களில் உவமையைவிட உருவகமே உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றி பெறுகின்றது. ‘முகநிலவில் வியர்வை முத்துகள் துளிர்த்தன” என்று உருவகமாக எழுதுகிறார்கள். ‘களம்புகத் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகைதான் அதற்குச் சான்று” - இது அறிஞர் அண்ணாவின் உரைநடை.

**உவமை அணியும் இணை ஒப்பும்**

ஒரு செய்யுளில் உவம உருபு மறைந்து வந்தால் அதற்கு எடுத்துகாட்டு உவமை அணி என்று பெயர்.

www.surabooks.com



*'புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை*
*வாய்மையால் காணப் படும்"*

இந்தத் திருக்குறளில் உவம உருபு இல்லை. இது உரைநடையில் பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்துகையில் 'இணை ஒப்பு' என்கிறோம். 'ஊர் கூடிச் செக்குத் தள்ள முடியுமா? என்று கேட்கிறார்கள். ஊர் கூடின பிறகுதான் செக்குத் தள்ள வேண்டும் என்று காத்திருப்பவர்களின் காரியம் கைகூடாது. புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை" என்று எழுத்தாளர். வ.இராமசாமி 'மழையும் புயலும்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**இலக்கணையும், எதுகை மோனையும்**

உயிர் இல்லாத பொருள்களை உயிர் உள்ளன போலவும், உணர்வு இல்லாத பொருள்களை உணர்வுடையன போலவும் கற்பனை செய்வதுண்டு, இதனை 'இலக்கணை' என்று அழைக்கிறோம். இதனைத் தொல்காப்பியர் 'ஞாயிறு, திங்கள், நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருள்கள், சொல்லுந போலவும், கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'சோலையில் புகுவேன்; மரங்கள் கூப்பிடும்; விருந்து வைக்கும், ஆலமர நிழலில் அமர்வேன்; ஆல்; என் விழுதை பார். அந்த அரசுக்கு இஃது உண்டா?" என்னும். அரசு கண்ணிற்படும். 'யான் விழுதின்றி வானுற ஓங்கி நிற்கிறேன். என்னை மக்கள் சுற்றிச் செல்கிறார்கள். காண்" என்னும், "வேம்பு, என் நிழல் நலஞ்செய்யும். என் பூவின் குணங்களைச் சொல்கிறேன் வா" என்று எங்கள் காலத் தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் இப்படி எழுதியிருக்கிறார்.

'தென்றல் அசைந்துவரும் தென்தமிழ் நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம்பகுதியாகும். அம்மலையிலே, கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும்; குரவமும் முல்லையும் நறுமணங் கமழும்! கோலமாமயில் தோகை விரித்தாடும்; தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும் என்று சொல்லின் செல்வர் இரா.பி.சே., தமிழின்பம் என்னும் நூலில் எழுதியுள்ளார்.

**கேள்வியிலேயே பதில்**

விடை தரவேண்டிய தேவை இல்லாமல் கேள்வியிலேயே பதில் இருப்பதைப் போலவும் எழுதுவதுண்டு. அது உணர்ச்சி வெளிப்பாட்டுக்கு உதவக் கூடியது!

"அவர் (பெரியார் ஈ.வே.ரா) பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத பழமை உண்டா? எதைக் கண்டு அவர் திகைத்தார்? எந்தப் புராணம் நான் அவரிடம் தாக்குதலைப் பெறாதது?... எனவேதான், பெரியாருடைய பெரும் பணியை நான் ஒரு தனிமனிதனின் வரலாறு என்றல்ல ஒரு சகாப்தம் - ஒரு கால கட்டம் - ஒரு திருப்பம் - என்று கூறுகிறேன்". இது பெரியாரைப் பற்றி அறிஞர் அண்ணா பேசியது.

**முடிவுரை**

தமிழ் உரைநடை செழுமைமிக்கது. படிக்கப் படிக்க இன்பம் விளைவிப்பது. பல்வேறு நயங்களையும், உணர்ச்சிகளையும் தன்னகத்தே கொண்டது. சொல்வளமும், பொருள்வளமும் மிகுந்தது. ஆகவே, உரைநடை நயத்தைப் படித்து இன்புறுவோம்.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



**நெடுவினா**

1. **ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக. சூழல் – வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல். (பாடநூல் வினா)**

**உறவினர் மகள் (மாலா)** : (ஆங்கிலச் செய்தித்தாள் படித்துக் கொண்டிருக்கிறார்.)

**செந்தமிழ் செல்வி** : என்ன மாலா! தமிழ்ச் செய்தித்தாள் படிக்கின்றாயா?

**மாலா** : செய்தித்தாள்தான். ஆனால் தமிழ் இல்லை. ஆங்கிலம்தான்.

**செந்தமிழ் செல்வி** : ஏன் தமிழ் படிக்கத் தெரியாதா?

**மாலா** : இல்லை. தமிழ் நன்றாகப் பேசுவேன். படிக்கத் தெரியாது. எனக்குத் தமிழ் நூல்கள் படிக்க விருப்பம்தான்.

**செந்தமிழ் செல்வி** : தமிழ் மிகவும் **எளிமையான மொழி**. அம்மொழியைப் பேசுவது எவ்வளவு எளிமையோ படிப்பதும் அவ்வளவு எளிமைதான்.

**மாலா** : அப்படியா?

**செந்தமிழ் செல்வி** : தமிழ் உரைநடைக்குக் கருத்துகள் தெரிந்தால் அவற்றை எளிதில் எழுதலாம். **வாக்கியமைப்பு திணை, பால், எண், இடம், காலம்** பொருந்தியும் **எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்** சரியாக அமைந்தால் போதும்.

**மாலா** : உரைநடை என்கிறாயே அது என்ன?

**செந்தமிழ் செல்வி** : செய்யுள் என்பவை **எதுகை, மோனை, இயைபு, அணி** என்று பல நயங்களால் அழகுப்படுத்தப்பட்டிருக்கும். **உரைநடை** அவ்வாறு இல்லை. உரைநடை என்பது **தொல்காப்பியர்** காலத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

**மாலா** : அப்படியா?

**செந்தமிழ் செல்வி** : **இறையனார் களவியல் உரை, இளங்கோவடிகள் உரை** என வளர்ந்து வந்துள்ளது. **திரு.வி.க, மு.வ., அண்ணா** போன்றோர் இருபதாம் நூற்றாண்டில் உரைநடை வளர்ச்சிக்குக் காரணமாக இருந்துள்ளனர்.

**மாலா** : உரைநடை வடிவில் வரும் இலக்கியங்கள் யாவை?

**செந்தமிழ் செல்வி** : **சிறுகதை, புதினம், புராணக் கதைகள்** இவையெல்லாம் உரைநடையே. உரைநடை வளர்ந்ததால் நாம் பிறமொழி நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து **பாரதியின்** அவாவை நிறைவேற்றியுள்ளோம்.

**மாலா** : **வீரமாமுனிவர், ஜி.யு.போப்** போன்ற சான்றோர்களும் இப்பணியைச் செவ்வனே ஆற்றியுள்ளார்கள் அல்லவா?

**செந்தமிழ் செல்வி** : சரியாகச் சொன்னாய். **கால்டுவெல்** தமிழுக்கு ஆற்றிய பணிகள் ஏராளம். இவர் தமிழ்மொழியின் சிறப்பைத் தமிழருக்குக் கூறியவர். உரைநடை வளர்ந்து வருவதால்தான் தமிழ் இலக்கியங்களைப் பிறர் அறிய முடிகிறது.

**மாலா** : தமிழ்மொழியை அறியாதவர்களால் தமிழைப் படித்து நூல்கள் இயற்றும் போது எனக்குத் தமிழ் பேசத் தெரியும். கற்பது என்ன கடினமா? இன்றே எனக்கு தமிழ் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொடு. நானும் கற்றுக் கொள்கிறேன்.

**செந்தமிழ் செல்வி** : சரி, வா!

☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



# எழுத்து,சொல் (கற்கண்டு)

**மொழி என்பதன் விளக்கம்**

✔ மனிதன் பெற்றுள்ள மிக அற்புதமான கருவியே மொழி என்பர் சான்றோர்.
✔ உள்ளத்தில் உள்ள எண்ணங்களை மற்றவர்களிடம் கூற, வெளிப்படுத்த இந்தக் கருவியே தகுந்த சாதனமாகக் கருதப்படுகின்றது.

**இலக்கணம் என்பதன் விளக்கம்**

✔ இலக்கு அணம் இலக்கணம். இலக்கு என்பதன் பொருள் குறிக்கோள். அணம் என்பதன் பொருள் அழகு. எனவே அழகைக் குறிக்கோளாகக் கொண்டது இலக்கணமேயாகும்.
✔ பிழையின்றி பேசப் பயன்படுவதும் எழுத உதவியாய் இருப்பதும் இலக்கணமேயாகும்.

**இலக்கணத்தின் வகைகள்**

✔ தமிழ் இலக்கணத்தின் வகைகள் **ஐந்து** எனக் கூறி வகைப்படுத்துவர் இலக்கண நூலார்.
✔ அவை **எழுத்திலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம், அணி இலக்கணம்.**


**எழுத்தின் வகைகள்**

✔ எழுத்து **முதல், சார்பு** என இருவகைப்படும்.

**முதல் எழுத்து என்பதன் விளக்கம்**

✔ **முதல் எழுத்து** என்பது மொழி உண்டாவதற்கு மூலமான எழுத்து முதல் எழுத்து ஆகும்.
✔ உயிர் மெய் **'அ'** முதல் **'ஔ'** வரை அதாவது அகரம் முதல் ஔகாரம் வரை உள்ள **12** எழுத்துகளும், மெய்யெழுத்து **'க்'** முதல் **'ன்'** வரை அதாவது ககர மெய் முதல் னகர மெய் வரை உள்ள **18** எழுத்துகளும் சேர்ந்து **30** எழுத்துகளும் முதல் எழுத்து என்பர் இலக்கண நூலார்.

**மன வரைபடம்**



www.surabooks.com



**சார்பெழுத்துகள் என்பதன் விளக்கம்**

- முதல் எழுத்துகளைச் சார்ந்து வருகின்ற எழுத்துகளுக்குச் **சார்பெழுத்துகள்** என்று பெயர்.
- சார்ந்து வருகின்ற காரணத்தினாலும் **தனித்து இயங்காத தன்மையைக்** கொண்டுள்ளதாலும் இந்த எழுத்துகளுக்கு இப்பெயர் ஏற்பட்டது என்று கூறுவர்.
- சார்பெழுத்துகள் **பத்து** வகைப்படும்.

**உயிர்மெய்**

ஒரு **மெய்** எழுத்தும் ஓர் **உயிர்** எழுத்தும் கூட்டாகச் சேர்வதால் பிறக்கும் எழுத்து **உயிர்மெய்** எழுத்தாகும்.

**எடுத்துக்காட்டு:** ங் அ ங - உயிர்மெய் எழுத்துகளின் எண்ணிக்கை 216. அதாவது உயிர் எழுத்து **12** மெய் எழுத்து **18**. உயிர் மெய் எழுத்து 12 × 18 **216**

**ஆய்தம்**

- ஆய்த எழுத்தை **முப்பாற்புள்ளி** என்றும், **தனிநிலை** என்றும் கூறுவர். இது ஃ இவ்வடிவில் எழுதப்பெறும். இ∴து தனித்து வராது. ஒரு குற்றெழுத்திற்கு அடுத்தும் வல்லின எழுத்திற்கு முன்னரும் வரும்.

**எடுத்துக்காட்டு:** எ∴கு, க∴சு, க∴டு, இருப∴து, க∴பு, ப∴று - உயிர் எழுத்தோடு கூடிய வல்லின எழுத்தைப்பெற்று வரும் ஆய்தம் (ஆறு வகை)

அவ் கடிது அ∴கடிது - புணர்ச்சியால் வந்த ஆய்தம் (ஒன்று)

அ கான் அ∴கான் - செய்யுள் விகாரத்தால் வந்த ஆய்தம்

## அளபெடை

**அளபெடை**

- அளபு - மாத்திரை

  எடை - எடுத்தல்

  அளபு எடை **அளபெடை** (அளவு அதிகமாதல்) செய்யுளில் சொல்லின் முதலிலும், இடையிலும், இறுதியிலும் தமக்குரிய **இரண்டு** மாத்திரையிலிருந்து **மூன்று** மாத்திரை அளவு ஒலிக்கும்.
- செய்யுளில் ஓசை குறையும்போது அவ்வோசையை நிறைவு செய்ய நெட்டெழுத்துகளான **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** இவை **ஏழும்** அளபெடுக்கும். அவ்வாறு அளபெடுக்கும் போது நெட்டெழுத்துகளுக்கு இனமான **குறில்** எழுத்துகள் பக்கத்தில் எழுதப்படும்.

**எடுத்துக்காட்டு:**

ஓஒதல் - முதலில் அளபெடுப்பது

கழூஉமணி - இடையில் அளபெடுத்தது

நல்லபடாஅ - இறுதியில் அளபெடுத்தது.

**மாத்திரை**

இயல்பாக கண் இமைக்கும் நேரமும், விரல் நொடிக்கும் நேரமுமாகும். மாத்திரை என்பதன் பொருள் அளவு

| | | |
|---|---|---|
| 1 | உயிரளபெடை | 3 மாத்திரை |
| 2 | நெடில் | 2 மாத்திரை |
| 3 | குறில் | 1 மாத்திரை |
| 4 | ஐகாரக்குறுக்கம் | 1 மாத்திரை |
| 5 | ஔகாரக்குறுக்கம் | 1 1/2 மாத்திரை |
| 6 | ஒற்றளபெடை | 1 மாத்திரை |
| 7 | மெய் (உடல்) | 1/2 மாத்திரை |
| 8 | குற்றியலிகரம் | 1/2 மாத்திரை |
| 9 | குற்றியலுகரம் | 1/2 மாத்திரை |
| 10 | ஆய்தம் | 1/2 மாத்திரை |
| 11 | மகரக்குறுக்கம் | 1/4 மாத்திரை |
| 12 | ஆய்தக்குறுக்கம் | 1/4 மாத்திரை |

**உயிரளபெடை**

செய்யுளில் இலக்கணம் கெடும்போது அல்லது ஓசை குறையும்போது அவற்றை நிறைவு செய்ய **நெடில்** எழுத்தை நீண்டு ஒலிக்கச்செய்வது **உயிரளபெடை** எனப்படும். அளபெடைக்கு அடையாளமாக நெடிலெழுத்து தனக்கு இனமான **குறிலைப்** பெறும்.